# தகவல்-மாலை அழைப்பிதழ்

பங்கேற்பு கட்டாயம்

## மழலையர் பள்ளிக்கு தயார்
## ஐப்பசி 2025 இல்

# மழலையர் பள்ளிக்கு தயார்

அடுத்த ஆவணி மாதம் உங்கள் பிள்ளை மழலையர் பள்ளியை ஆரம்பிக்கின்றது. ஒரு பெரிய தருணம்-உங்களுக்கும் மற்றும் உங்கள் பிள்ளைக்கும். நத்தார் தினத்திற்கு முன், பதிவு செய்யும் படிவத்தை தபால் பெட்டிக்குள் காண்பீர்கள். மழலையர் பள்ளி தொடக்கத்திற்கும் மற்றும் மழலையர் பள்ளியில் இருக்கும் நேரத்திற்கும் நீங்கள் நன்கு தயாராக இருப்பதற்கு நாங்கள் உங்களை

தகவல்-மாலை ‚மழலையர் பள்ளிக்கு தயார்‘. க்கு அன்புடன் அழைக்கிறோம்.

பதிவு மற்றும் ஒதுக்கீடு நடைமுறை பற்றி நாங்கள் உங்களுக்கு தெரிவிப்போம். பாடநேரங்கள், விடுமுறை மற்றும் ஜோக்கர் நாட்கள் பற்றிய முக்கிய விடயங்களை அறிவீர்கள். மற்றும் மழலையர் பள்ளியில் கற்பிக்கப்படும் கற்றல் உள்ளடக்கம் பற்றிய அறிவைப் பெறுவீர்கள்.

தகவல்-மாலையில் பங்கேற்பது அனைத்து பெற்றோர்களுக்கும் அல்லது சட்டபூர்வ பாதுகாவலர்களுக்கும் **கட்டாயமாகும் *** (குறைந்தது ஒரு நபர்). இதற்கான நான்கு சந்திப்புகளை உங்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்கிறோம்.

செவ்வாய்க்கிழமை, 21. ஐப்பசி 2025, 18:00 மணி
செவ்வாய்க்கிழமை, 21. ஐப்பசி 2025, 20:00 மணி
வியாழக்கிழமை, 23. ஐப்பசி 2025, 18:00 மணி
வியாழக்கிழமை, 23. ஐப்பசி 2025, 20:00 மணி

நிகழ்வு இடம்: பாடசாலை am Bach, Aula, 2. வது மேல்தளம், Bachstrasse 62, 8200 Schaffhausen

உங்கள் பிள்ளை **இல்லாமல்** நிகழ்விற்கு வாருங்கள்.
ஆர்வமுள்ளவர்களுக்கு மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களை வழங்குவதில் நாங்கள் மகிழ்கிறோம்.

புதன்கிழமை, 22. புரட்டாதி 2025, இற்குள் உங்களை www.schulen-stadtsh.ch. இல் பதிவு செய்யுங்கள்.

* கடந்த ஆண்டு, 2024 இலையுதிர் காலத்தில், "மழலையர் பள்ளிக்கு தயார்" நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பங்கேற்பது கட்டாயம் இல்லை. இருந்தாலும் பதிவை நிரப்பவும்.